**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**

Ang Mo Kio Tamil Methodist Church

***23rd பிப்ரவரி / February 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

| | |
|---|---|
| **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி. மெர்சி நோயல்**<br>Mrs. Mercy Noel |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி. மெர்சி நோயல்**<br>Mrs. Mercy Noel |
| **தொடக்க பாடல்**<br>Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**அருளின் மாமழை பெய்யும்**

*1. "அருளின் மாமழை பெய்யும்*
*என்று வாக்களித்தோரே!*
*மாரியாய்ப் பெய்திடச்*
*செய்யும்.*
*லோகத்தின் இரட்சகரே!*

**தேவன்பின் வெள்ளம்**
**தேவன்பின் வெள்ளம் தேவை,**
**கொஞ்சம் ருசித்த என் உள்ளம்**
**கெஞ்சுதே, இன்னும் தேவை.**

*2. கற்பாறைப் போல்*
*பாவி உள்ளம்*
*கடினப்பட்டதய்யோ!*
*பரிசுத்தாவியின் வெள்ளம்*
*கரைக்க வல்லதல்லோ!*

*3. வெட்டாந்தரை நிலத்தானும்*
*"ஏதேன்போல் மாறும்" என்றீர்;*
*சாபத்துக்குள்ளான முற்பூண்டும்*
*கேதுருவாகும்" என்றீர்!*

*4. தேசத்தின் இருளைப்பாரும்*
*லோகத்தின் மெய்த்தீபமே;*
*ஆவியின் அருளைத்தாரும்*
*மனமாற்ற வல்லவரே!*

| | |
|---|---|
| **மாறி வாசித்தல் 8ம் ஞாயிறு**<br>"சங்கீதம் 24" | **சபையார் இணைந்து**<br>Congregation |

"பூமியும் குடிகளும் கர்த்தருடையது"

Psalter Reading – "Psalm 24"

| | |
|---|---|
| **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**<br>Pastor. Jesudoss Charles |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord's Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **சிறப்புப் பாடல்**<br>Special Song | **பாடகர் குழு**<br>Choir |
| **காணிக்கைப் பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

**கிருபையிதே தேவ கிருபையிதே**

**கிருபையிதே தேவ கிருபையிதே**
**தாங்கி நடத்தியதே**
**இயேசுவிலே பொன் நேசரிலே**
**அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்**

*1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே*
*ஜீவியப் பாதையிலே -இயேசு பரன்*
*அநுதினமும் வழிநடந்தே*
*அவரது நாமத்தில் காத்தனரே*

*2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்*
*வியாதியும் வேதனையும் - வைத்தியராய்*
*இயேசுவல்லால் சார்ந்திடவோ*
*இகமதில் வேறெமக் காருமில்லை*

*3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்*
*ஆழமும் அறிந்துணர -அனுக்கிரகித்தார்*
*கிறிஸ்துவிலே ஒரு மனையாய்*
*சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுத்ராய்*

*4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே*
*நித்திய ஜீவனை நாம் -பற்றிடவே*
*விசுவாசத்தில் நிலைத்திடுவோம்*
*அசையாது அழைப்பினைக் காத்துக் கொள்வோம்*

*5. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன்*
*வாருமென் றழைக்கின்றரே வாருமென்பீர்*
*சீயோனே நீ பார் உனக்காய்*
*நாயகன் இயேசு தாம் வெளிப்படுவார்*

| | |
|---|---|
| **பூலோகத்தாரே யாவரும்**<br>Doxology | **சபையார் இணைந்து**<br>Congregation |

✝ **திருமறைப் பாடம்** — **திரு. ஜோயல்**
Scripture Reading — Mr. Joel
***II கொரிந்தியர் : 12 : 2 - 10***
2 Corinthians 12 : 2 - 10

**அருளுரை** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Sermon — Pastor. Jesudoss Charles

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

## தம் கிருபை பெரிதல்லோ

**தம் கிருபை பெரிதல்லோ**
**எம் ஜீவனிலும் அதே**
**இம்மட்டும் காத்ததுவே**
**இன்னும் தேவை கிருபை தாருமே**

*1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை*
*வாழ் நாளெல்லாம் அது போதுமே*
*சுகமுடன் தம் பெலமுடன்*
*சேவை செய்ய கிருபை தாருமே*

*2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை*
*நீசன் என் பாவம் நீங்கினதே*
*நித்திய ஜீவன் பெற்றுக் கொண்டேன்*
*காத்துக்கொள்ள கிருபை தாருமே*

*3. தினம் அதிகாலையில் தேடும் புதுக்கிருபை*
*மனம் தளர்ந்த நேரத்திலும்*
*பெலவீன சரீரத்திலும்*
*போதுமே உம்கிருபை தாருமே*

*4. மா பரிசுத்த ஸ்தலம் கண்டடைவேன் கிருபை*
*மூடும் திரை கிழிந்திடவே*
*தைரியமாய் சகாயம் பெற*
*தேடி வந்தேன் கிருபை தாருமே*

*5. ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியம் உம் கிருபை*
*என்றும் மறவேன் வாக்குத் தத்தம்*
*நீதியுமே சமாதானமே*
*நிலைநிற்கும் கிருபை தாருமே*

*6. ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை*
*ஆத்தும பாரம் கண்ணீரோடே*
*சோர்வின்றி நானும் வேண்டிடவே*
*ஜெப வரம் கிருபை தாருமே*

*7. கர்த்தர் வெளிப்படும் நாள் அளித்திடும் கிருபை*
*காத்திருந்தே அடைந்திடவே*
*இயேசுவே உம்மைச் சந்திக்கவே*
*இரக்கமாய் கிருபை தாருமே*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனங்கள்** — **சபையார் இணைந்து**
***Memory Verses*** — Congregation
***II கொரிந்தியர் 12 : 9***
***2 Corinthians 12 : 9***

***9. அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Closing Prayer & Benediction — Pastor. Jesudoss Charles

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing